

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை 2017

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதிக்கு கையளிப்பதற்காக 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை தயாரிக்கப்படுகிறது.

**வெளியீடு**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

இல 36, மலலசேகர மாவத்தை

கொழும்பு 07.

**அச்சுப்பதிப்பு**

அரசாங்க அச்சகத்திணைக்களம்

இல 118, டெனிஸ்டர் சில்வா மாவத்தை

கொழும்பு 08.

**வெளியீட்டு உரிமை**

ஆணைக்குழுவிற்குரியது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முன் அனுமதியின்றி இவ்வறிக்கையின் பகுதியையோ, தகவல்களையோ பிரதியெடுத்தல் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

## பணிக்கூற்று

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவின் நோக்கமானது இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக போராடுவதற்கு தலைமை தாங்குதல் மற்றும் நபர்களின் சட்டவிரோத சொத்துக்குவிப்புக்களை தடுப்பு நிவாரண முறைகள் மற்றும் வழக்கு தொடுத்தல் மூலம் தடுத்தல்.



# பொருளடக்கம்


**01.அறிமுகம்** 5

1.1. ஆணைக்குழு
1.2. இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பிற்கான பணிப்பாளர் நாயகம்

**02. ஆணைக்குழு** 7

2.1. ஆணைக்குழுவிற்கு செய்யப்படும் முறைப்பாடுகள்
2.2. செயலாளர் பிரிவு
2.3. 2017ஆம் ஆண்டு ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்
2.3.1. 2014 முதல் 2017 வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்
2.3.2. 2017 ம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளும் அவை புலனாய்விற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விதமும்

**03. பணிப்பாளர் நாயகம்** 15

3.1 நியமனங்கள்
3.2 பொறுப்புக்கள்

**04. புலனாய்வுப்பிரிவு** 16

4.1. பணிப்பாளர் ( புலனாய்வு )
4.2. பதில் புலனாய்வுப்பணிப்பாளரும் உதவிப்புலனாய்வுப்பணிப்பாளரும்

4.3. பொறுப்பதிகாரி (இலஞ்சம்)
4.3.1. ஊழல் புலனாய்வுப்பிரிவு
4.3.2. திறந்த விசாரணைப்பிரிவு
4.3.3. சொத்துக்கள் புலனாய்வுப்பிரிவு
4.3.4. திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 1 2 3 மற்றும் 4
4.3.5 நீதிமன்ற செயற்பாட்டுப்பிரிவு
4.3.6. நிருவாகப்பிரிவு
4.4 2017 ஆம் ஆண்டின் முறைப்பாடுகள் மற்றும் புலனாய்வு முன்னேற்றம்
4.5. 2017 ஆம் ஆண்டின் திடீர் சுற்றிவளைப்புக்கள்
4.6. 2017 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட கைதுகளின் விபரம்

**05. சட்டப்பிரிவு** 23

5.1. 2017 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்
5.2. 2017.12.31 வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்
5.3. 2014 முதல் 2017 வரையான வழக்குகள்
5.4. 2017 இல் நீதிமன்றத்தால் நிறைவு செய்யப்பட்ட வழக்குகள்
5.5. 2014 முதல் 2017 வரை தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகள்

**06. நிருவாகப்பிரிவு** 27

6.1. 2017.12.31 ஆம் திகதியன்று சட்டம், நிருவாகப் பிரிவுகளிலுள்ள வெற்றிடங்கள்
6.2. மனிதவள அபிவிருத்தி
6.3. போக்குவரத்துப்பிரிவு

**07. நிதிப்பிரிவு** 36

7.1 நிதிப்பிரிவின் முக்கிய செயற்பாடுகள்
7.2 2017 ஆம் ஆண்டுக்கான பொது திறைசேரியின் நிதி ஒதுக்கீடு மற்றும் 2017.12.31 ஆம் திகதிக்கான உண்மையான செலவின விபரங்கள்

**08. தடுப்புப்பிரிவு** 38

8.1. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

**09. இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்கான அடிப்படை செயற்றிட்டங்கள்** 41

9.1. சட்டத்திருத்தங்கள்
9.2. தேசிய செயல் திட்டம்
9.3. சர்வதேசப்பொறுப்புக்கள்
9.4. நேர்மைத்திறன் செயற்றிட்டங்கள்
9.5. துறைசார் புலன் விசாரணை அலுவலர்கள் மற்றும் தடுப்பு நிவாரணப்பிரிவு
9.6. சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் தனித்தனி சேவைக்குழுக்கள்
9.7. புதிய கட்டிட நிர்மாணிப்புகள்
9.8. முகாமைத்துவத் திணைக்களத்திலிருந்து பதவிகளுக்கு அனுமதி
9.9. உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு
9.10. வெற்றிடங்களை நிரப்புதல்

# அறிமுகம்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவானது 1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டு 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் செயற்படத்தொடங்கியது.

## 1.1 ஆணைக்குழு

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுச்சட்டத்தின் 2 (ஆ) பிரிவிற்கிணங்க அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசின் பேரில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலத்திற்கு பதவியில் நியமிக்கப்படுவார்கள்.

ஆணைக்குழுவானது மூன்று உறுப்பினர்களை கொண்டிருப்பதோடு அவர்களில் இருவர் உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர்களாக இருக்க வேண்டும். மூன்றாவது உறுப்பினர் குற்றப்புலனாய்வு மற்றும் சட்டத்தை நிலைநாட்டுதல் தொடர்பாக பரந்த அனுபவமுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் தவிசாளராக உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர்களுள் ஒருவரே நியமிக்கப்படுவார்.

**2015 ஒக்டோபர் 20 ஆம் திகதி**

*5 ஆவது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்*

| பதவி | பெயர் | வேறு தகவல்கள் |
|---|---|---|
| • **தவிசாளர்** | • நீதியரசர். டி.பி. வீரசூரிய | • ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் |
| • **ஆணையாளர்** | • நீதியரசர். லால் ரஞ்சித் சில்வா | • ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் |
| • **ஆணையாளர்** | • திரு. சி. நெவில் குருகே | • ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபர் |

## 1.2. இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பிற்க்கான பணிப்பாளர் நாயகம்

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவுமுகமாக அதிமேதகு

ஜனாதிபதி அவர்களால் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பிற்க்கான பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுவார். தற்போது திரு. சரத் ஜயமான்ன (ஜனாதிபதி சட்டதரணி) அவர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பிற்க்கான பணிப்பாளர் நாயகமாக 2016.11.24 முதல் கடமையாற்றுகிறார்

ஆணைக்குழுவின் கடப்பாடுகளையும் செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு உதவுமுகமாக சட்ட உத்தியோகத்தர்களும், புலனாய்வு உத்தியோகத்தர்களும் மற்றும் அரச ஒருங்கிணைந்த சேவையின் பணியாள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்களும் அலுவலகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட அனைத்து ஊழியர்களும் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் தகவல்களின் இரகசியத்தன்மையை பேணுவதற்கு கடப்பாடுடையவர்களாவர்.

**பணிப்பாளர் நாயகங்கள்**

| | |
|---|---|
| **திருமதி. பி . நெலும் கமகே** | 1994 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் |
| **திரு. ரியன்ஸி அரசகுலரட்ண** | 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் |
| **திரு. பியசேன ரணசிங்க** | 2001 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் |
| **திருமதி. லஷ்மி ஜயவிக்ரம** | 2008 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் |
| **திரு. கணேஷ் தர்மவர்தன** | 2014 ஆம் ஆண்டு யூலை 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் |
| **திருமதி. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க** | 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் |
| **திரு. சரத் ஜயமான்ன** | 2016 ஆம் ஆண்டு நவம்பர 24 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் |

## ஆணைக்குழு

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுச்சட்டத்தின் 2 (ஆ) ஆம் பிரிவிற்கிணங்க அரசியலமைப்பு பேரவையின் சிபாரிசின் பேரில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஐந்தாண்டு காலத்திற்கு பதவியில் நியமிக்கப்படுவார்கள்.

ஆணைக்குழுவானது மூன்று உறுப்பினர்களை கொண்டிருப்பதோடு அவர்களில் இருவர் உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர்களாக இருக்க வேண்டும். மூன்றாவது உறுப்பினர் குற்றப்புலனாய்வு மற்றும் சட்டத்தை நிலைநாட்டுதல் தொடர்பாக பரந்த அனுபவமுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும். ஆணைக்குழுவின் தவிசாளராக உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர்களுள் ஒருவரே நியமிக்கப்படுவார்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு ஏதும் முறைப்பாடொன்று கிடைக்கப்பெறுமிடத்து அது தொடர்பாக புலனாய்வு மேற்க்கொள்ளப்படல் வேண்டும் என்ற போதிலும் குறிப்பிட்ட முறைப்பாடு சார்பாக புலனாய்வு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முன்பாக அம்முறைப்பாடானது உண்மையானதென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் புலனாய்வு மேற்க்கொள்ளப்பட போதுமானளவு தகவல்களை கொண்டிருப்பதாகவும் ஆணைக்குழு திருப்தியுறுதல் வேண்டும்.

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடு ஒன்றின் மூலம் ஒருவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளோ செல்வம் அல்லது சொத்துக்களை திரட்டல் அல்லது அண்மையில் செய்துக்கொள்ளப்பட்ட பணப்பரிமாற்றம் அல்லது வியாபார கொடுக்கல் வாங்கல் அல்லது செலவுகள், குறிப்பிட்ட நபரின் அடையாளம் காணப்பட்ட வருவாயை விட மிஞ்சியதாக அல்லது பொருத்தமற்றது என தகவல் வெளிப்படுமிடத்து அக்குறிப்பிட்ட முறைப்பாடானது உண்மையானது என ஆணைக்குழுவானது திருப்திப்படுமிடத்து அப்போதைய நிலைமையை கருத்திற்க்கொண்டு ஆணைக்குழுவினால் புலனாய்வு நடவடிக்கையை மேற்க்கொள்ள முடியும். ஆகவே இலஞ்ச சட்டத்தின் மூலம் அல்லது தேசிய அரசுப்பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரவோ வேறு உசித நடவடிக்கை எடுப்பதோ அல்லது வேறு ஏதும் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்தலுக்கு தேவையான புலனாய்வு நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்க்கொள்ள வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவானது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நியதி சட்ட அதிகாரம் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் 5 ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடொன்றின் பெயரில் புலனாய்வு நடவடிக்கை ஒன்று மேற்க்கொள்ள வேண்டியிருக்கும் வேளையில் ஒரு நபர் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அல்லது 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும்

வெளிப்படுத்தல் சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளதாக ஆணைக்குழுவிற்கு தென்படுமிடத்து குறிப்பிட்ட நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு பணிப்பாளர் தலைமையதிபதியை ஆணைக்குழுவினால் பணிக்க முடியும்.

இவ் ஆணைக்குழுச்சட்டத்தின் 9 ஆம் பிரிவில் ஆணைக்குழுவின் முன் ஆஜர்படுத்தப்படும் நபர்களுக்குள்ள நலன்களும் சிறப்புரிமைகளும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுச்சட்டத்தின் 17 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் ஆணைக்குழுவின் சகல உறுப்பினர்களும், பணிப்பாளர் தலைமையதிபதி உள்ளிட்ட ஆணைக்குழுவிற்கு உதவுமுகமாக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் தமது பதவி பொறுப்பை ஏற்பதற்கு முன் இச்சட்டத்தின் கீழ் அதிகாரத்தை பிரயோகிக்கும் போதும் கடப்பாடுகளை செயற்படுத்தும் போதும் கிடைக்கப்பெறும் தகவல்களின் இரகசிய தன்மையை பாதுகாப்பதென்று வெளிப்படுத்துகை ஒன்றில் ஒப்பமிடல் வேண்டும்.

## 2.1 ஆணைக்குழுவிற்கு கிடைக்க பெறும் முறைப்பாடுகள்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளை செய்ய பல வழிகள் உள்ளன.

1. ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு வருகை தருவதன் மூலம்
2. எழுத்து மூலம் (பெயருடன் அல்லது அநாமேதயமாக)
3. தொலைபேசி மூலம்

- துரித தொலைபேசி எண் - 1954
- புலனாய்வுப்பணிப்பாளர் - 011-2586841
- ஆணைக்குழு அலுவலகம் - 011-2586257
- தொலை நகல் - 011-2595045
- மின்னஞ்சல் - **ciaboc@eureka.lk**
- இணையத்தளம் - **www.ciaboc.gov.lk**

## 2.2 செயலாளர் பிரிவு

ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் சகல முறைப்பாடுகளும் பதியப்பட்டு முறையான பணிப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை இப்பிரிவினால் மேற்க்கொள்ளப்படும்.


05.04.2017 ம் திகதி முதல் இப்பிரிவானது இலங்கை நிர்வாக சேவையின் விஷேட வகுப்பு உத்தியோகத்தரான திருமதி. ஆர்.எம்.வீ. சாந்தி ஜயசேகர அவர்களால் தலைமை தாங்கப்படுகிறது.

**2.3. 2017 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் விபரங்கள்**

**அட்டவணை இல - 01**

| | | |
|---|---|---|
| அநாமதேய முறைப்பாடுகள் | 1233 | 2768 |
| திடீர் சுற்றிவளைப்புக்கள் | 62 | |
| பெயரிடப்பட்ட முறைப்பாடுகள் | 1473 | |

**வரைபு இல - 01**




**2.3.1. 2014 முதல் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பெறப்பட்ட முறைப்பாடுகளின் பகுப்பாய்வு**

**அட்டவணை இல - 02**

| வருடம் | பெறப்பட்ட முறைப்பாடுகள் | புலனாய்விற்கு எடுக்கப்பட்ட முறைப்பாடுகள் | தகவல்கள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலஞ்சம் தொடர்பானது | ஊழல் தொடர்பானது | வெளிப்படுத்தாத சொத்துக்கள் பெறுப்புகள் | சட்ட விரோத சொத்துக்கள் |
| 2014 | 2345 | 893 | 357 | 418 | - | 118 |
| 2015 | 3964 | 1823 | 421 | 1173 | - | 229 |
| 2016 | 3450 | 2435 | 465 | 1503 | - | 467 |
| 2017 | 2768 | 1652 | 417 | 983 | - | 169 |

**வரைபு இல - 02**




## 2017 ஆம் ஆண்டு புலனாய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் திடீர் சுற்றிவளைப்புக்கள்

**அட்டவணை இல - 03**

| இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகள் | ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் | சட்ட விரோத சொத்துக்குவிப்பு | திடீர் சுற்றிவளைப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 417 | 983 | 173 | 79 | 1652 |

**வரைபு இல - 03**




**2017 ஆம் ஆண்டில் புலனாய்விற்கு எடுத்துக்கொள்ளப்படாத முறைப்பாடுகள்- 731**

**அட்டவணை இல - 04**

| விபரம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஏனைய நிறுவனங்களுக்கு முன்னளிப்புச் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 334 |
| போதுமானளவு காரணிகளின்மை மற்றும் தெளிவின்மை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 397 |
| **மொத்தம்** | 731 |

விசாரணை மேற்க்கொள்ளல் பற்றி இன்னும் முடிவு செய்யப்படாத நிலையிலுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை – 385

**அட்டவணை இல - 05**

| விபரம் | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| வேறு நிறுவனங்களிலிருந்து அறிக்கை பெறப்படுவதற்காக நிலுவையிலுள்ள முறைப்பாடுகள் | 382 |
| புலனாய்வு நடவடிக்கைகளை தொடங்க சட்ட அறிக்கைகளை கோர முடிவு செய்யப்பட்டிருக்கும் முறைப்பாடுகள் | 03 |
| **மொத்தம்** | 385 |

**31.12.2017 திகதி வரை ஆணைக்குழுவினால் தள்ளுபடி செய்யப்பட்ட முறைப்பாடுகள் - 1141**

**அட்டவணை இல - 06**

| புலனாய்விற்கு முன் | புலனாய்விற்கு பின் | மொத்தம் |
|---|---|---|
| 731 | 410 | 1141 |


2014 முதல் 2017 வரை இந்த ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பற்றிய விபரம்

**அட்டவணை இல - 07**


| ஆண்டு | பெறப்பட்ட முறைப்பாடுகள் | புலனாய்விற்கு எடுக்கப்பட்ட முறைப்பாடுகள் | வகைகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலஞ்சம் தொடர்பானது | ஊழல் தொடர்பானது | வெளிப்படுத்தாத சொத்துக்கள் பெறுப்புகள் | சட்ட விரோத சொத்துக்கள் |
| 2014 | 2345 | 893 | 357 | 418 | - | 118 |
| 2015 | 3964 | 1823 | 421 | 1173 | - | 229 |
| 2016 | 3450 | 2435 | 465 | 1503 | - | 467 |
| 2017 | 2768 | 1652 | 417 | 983 | - | 173 |

| வருடம் | மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | நிறைவு பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | குற்றவாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2008 | 63 | 20 | 14 |
| 2009 | 43 | 56 | 24 |
| 2010 | 67 | 38 | 17 |
| 2011 | 34 | 40 | 20 |
| 2012 | 77 | 60 | 33 |
| 2013 | 58 | 55 | 17 |
| 2014 | 64 | 58 | 22 |
| 2015 | 108 | 52 | 15 |
| 2016 | 87 | 34 | 15 |
| 2017 | 73 | 89 | 57 |

## நிறைவு பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை



### குற்றவாளிகளின் எண்ணிக்கை



# பணிப்பாளர் நாயகம்

## 3.1 நியமிப்பு முறை

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவுமுகமாக அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பிற்க்கான பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுவார்.

## 3.2 பொறுப்புக்கள்

1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரமும் இலஞ்ச சட்டத்தின் II ஆம் பிரிவில் குறிப்பிடபட்டுள்ள சட்டதிட்டங்களின் பிரகாரம் இலஞ்சமாக ரூபா 2000 இற்கு மிஞ்சாத இலஞ்சமொன்றை /கையூட்டை கேட்டல் அல்லது ஏற்றுக்கொள்ளல் அல்லது வழங்குதல் சம்பந்தமாக தகவல் வெளியிடப்படுமிடத்து நீதவான் நீதிமன்றத்திலும், 2000 இற்கு மேற்பட்ட இலஞ்சமொன்றை கேட்டல் அல்லது கையூட்டை ஏற்றுக்கொள்ளல் அல்லது வழங்குதல் சம்பந்தமாக தகவல் வெளியிடப்படுமிடத்து மேல் நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்வதற்கு பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு ஆணைக்குழுவினால் பணிப்புரை வழங்கப்படும். ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்பமிடப்படும் குற்றப்பத்திரிக்கை ஒன்றின் மூலம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும் போது அக்குற்றப்பத்திரிக்கையானது சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையாக கணிக்கப்பட்டு மேல் நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கான சட்ட அதிகாரம் உள்ளது.

இலஞ்சத்தின் மூலம் சுவீகரித்து கொண்ட சொத்துக்கள் அல்லது ஆதனங்கள் மற்றும் இலஞ்சத்தின் மூலம் சுவீகரித்து கொண்ட சொத்துக்கள் அல்லது ஆதனங்களின் மாற்றீடு சம்பந்தமாக இலஞ்ச சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரமும், சொத்துக்களை சுவீகரித்து கொள்ளல் சம்பந்தமாக (இலஞ்ச சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம்) பணிப்பாளர் நாயகத்தினால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் குற்றப்பத்திரிக்கை ஒன்றின் மூலம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். இலஞ்ச சட்டத்தின் 70 ஆம் பிரிவின் பிரகாரம் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தகவல்கள் வெளிகொண்டுவரப்படுமிடத்து பணிப்பாளர் நாயகத்தினால் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும். மற்றும் தேசிய அரசுப்பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துகை சட்டத்தின் கீழ் இழைக்கப்பட்ட குற்றங்கள் சம்பந்தமாக நீதவான் நீதிமன்றத்திலும் ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் பணிப்பாளர் நாயகத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பிற்கான பணிப்பாளர் நாயகம் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் நிருவாகத்திற்கு பொறுப்பு கூறும் உத்தியோகத்தராகவும் பிரதான கணகீட்டு உத்தியோகத்தராகவும் கடமையாற்றுவார். பணிப்பாளர் நாயகத்தின் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகள்,

பொறுப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றுவதற்காக பணிப்பாளர் (நிருவாகம்) மற்றும் பணிப்பாளர் (நிதி) ஆகியோர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

# புலனாய்வுப்பிரிவு

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமான சகல புலனாய்வு விசாரணைகளும் ஆணைக்குழுவில் நிறுவப்பட்டுள்ள புலனாய்வுப்பிரிவினால் மேற்க்கொள்ளப்படுகிறது

1954 ஆம் ஆண்டு II ஆம் இலக்கமுடைய இலஞ்ச சட்டத்தின் மூலம் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வுச் செய்வதற்கான ஆணைக்குழு சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி புலனாய்வுப்பிரிவின் அலுவலர்கள் நியமிக்கப்பட்டு புலனாய்வு நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

புலனாய்வுப்பணிப்பாளர் ஒருவரின் தலைமையின் கீழ் இப்பிரிவின் செயற்பாடுகள் வழி நடாத்தப்படுவதோடு பிரதி புலனாய்வுப்பணிப்பாளர் மற்றும் உதவி புலனாய்வுப்பணிப்பாளர்கள் ஆகிய இருவரது கீழும் புலனாய்வு நடவடிக்கைகள் பிரிவுகளாக வேறாக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகளின் பொறுப்பதிகாரிகளாக அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட பரிசோதகர் தரத்திலுள்ள பொலிஸ் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப்பிரிவானது பொலிஸ் திணைக்களத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட **209** பொலிஸ் உத்தியோகத்தர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

**புலனாய்வுப்பிரிவானது**

01. ஊழல் குற்றங்களை புலனாய்வு செய்யும் பிரிவு
02. திறந்த விசாரணை பிரிவு
03. சொத்துக்கள் புலனாய்வுப்பிரிவு
04. திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 01
05. திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 02
06. திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 03
07. திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 04
08. நீதிமன்ற செயற்பாட்டுப்பிரிவு
09. நிர்வாகப்பிரிவு

என 9 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது

## 4.1. புலனாய்வுப்பணிப்பாளர்

புலனாய்வுப்பிரிவின் சகல நிர்வாக செயற்பாடுகளும் மேற்குறிப்பிட்ட புலனாய்வு பிரிவின் பணிப்பாளரினால் மேற்க்கொள்ளப்படுகிறது. தற்போது புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு.டி. பிரியந்த சந்திரசிரி அவர்கள் செயலாற்றுகிறார்கள்.

ஆணைக்குழுவினாலும் பணிப்பாளர் நாயகத்தினாலும் புலனாய்வு நடவடிக்கைக்காக ஆற்றுப்படுத்தப்படும் சகல தொடர்பாடல்களையும் புலனாய்வுப்பணிப்பாளர் தனது மேற்பார்வையின் கீழ் புலனாய்வு செய்வதற்கும் அதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும் புலனாய்வின் முன்னேற்றம் பற்றி திரும்பவும் ஆணைக்குழுவிற்கும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பார்.

## 4.2. பதில் புலனாய்வுப்பணிப்பாளரும், உதவி புலனாய்வுப்பணிப்பாளரும்

புலனாய்வுப்பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுமுகமாக இப்பதவிகள் உருவாக்கப்பட்டன. பதில் புலனாய்வுப்பணிப்பாளர் பதவி தற்போது வெற்றிடமாக உள்ள நிலையில் உதவி புலனாய்வுப்பணிப்பாளராக பெண் உதவி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திருமதி. டப்ளியூ. ஜே. பத்மினி அவர்கள் கடமையாற்றுகிறார்.

## 4.3. பொறுப்பதிகாரி (இலஞ்சம்)

பிரதான பொலிஸ் பரிசோதகர் திரு.ஏ.பீ. லியனகே அவர்களால் இப்பதவி வகிக்கப்படுவதோடு புலனாய்வுப்பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள சகல புலனாய்வு உத்தியோகத்தர்களினதும் நிருவாக செயற்பாடுகளும் இவரினால் மேற்பார்வை செய்யப்படும் மற்றும் புலனாய்வுப்பணிப்பாளருக்கு தேவையான உதவிகளை வழங்குவதோடு ஊழல் புலனாய்வுப்பிரிவு, திறந்த புலனாய்வுப்பிரிவு என்பவற்றின் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து புலனாய்வின் முன்னேற்றம் பற்றி ஆணைக்குழுவிற்கும் பணிப்பாளர் நாயகத்திற்கும் அறிக்கை சமா்ப்பிப்பதற்கு இவரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### 4.3.1 ஊழல் புலனாய்வுப்பிரிவு

இப்பிரிவானது 4 பிரிவுகளை உள்ளடக்கியது. ஊழல் புலனாய்வு I ஆம் பிரிவானது பிரதான பொலிஸ் பரிசோதகர் திரு.பீ.ஜீ. சுமேந்திர அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

ஊழல் புலனாய்வு II ஆம் பிரிவானது பிரதான பொலிஸ் பரிசோதகர் திரு.எம்.பி. நாலக நுவன்சிரி அவர்களாலும், ஊழல் புலனாய்வு III ஆம் பிரிவானது பொலிஸ் பரிசோதகர் திரு.கே.எல். விஜேயசிரி அவர்களாலும், ஊழல் புலனாய்வு IV ஆம் பிரிவானது பொலிஸ் பரிசோதகர் யூ.பீ. விக்ரமாராச்சி அவர்களாலும் நிர்வகிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவின் அனுமதியுடன் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளில் இலஞ்ச சட்டத்தின் 70 ஆம் பிரிவின் பிரகாரம் இழைக்கப்பட்டுள்ள ஊழல் குற்றங்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும் அப்புலனாய்வின் முன்னேற்றம் பற்றி மேற்பார்வை உத்தியோகத்தருக்கு அறிக்கை சமா்ப்பிப்பதும் இப்பிரிவின் பணியாகும்.

### 4.3.2 திறந்த விசாரணைப்பிரிவு

இப்பிரிவானது பொலிஸ் பரிசோதகர் திரு. ஏ.என். வீரகோன் அவர்களால் தலைமை தாங்கப்படுகிறது.

இலஞ்சம் கேட்டல், பெற்றுக்கொள்ளல் மற்றும் இலஞ்சம் கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் நடைபெற்றுவிட்ட பின்னர் அவை தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுமிடத்து அவை தொடர்பாக புலனாய்வு செய்து அப்புலனாய்வின் முன்னேற்றம் பற்றி மேற்பார்வை உத்தியோகத்தருக்கு அறிக்கை சமர்ப்பிப்பது இப்பிரிவின் பணியாகும்.

### 4.3.3. சொத்துக்கள் புலனாய்வுப்பிரிவு

இப்பிரிவானது பொலிஸ் பரிசோதகர் திரு. ஈ.என். தர்மதாஸ அவர்களால் தலைமை தாங்கப்படுகிறது.

இலஞ்ச சட்டத்தின் மூலம் அல்லது 1975 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துகை சட்டத்தின் அறிவுறுத்தல்களிற்கேற்ப கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆணைக்குழுவின் அனுமதியுடன் புலனாய்வு செய்வதும் அப்புலனாய்வின் முன்னேற்றம் பற்றி மேற்பார்வை உத்தியோகத்தருக்கு அறிக்கை சமர்ப்பிப்பது இப்பிரிவின் பணியாகும்.

### 4.3.4. திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 01, 02, 03 மற்றும் 04

திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 01 ஆனது பொலிஸ் பரிசோதகர் திரு. எம்.எச்.டி.எல். அப்புஹாமி அவர்களாலும் திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 02 ஆனது பொலிஸ் பரிசோதகர் திரு. ஏ.எம்.கருணாசிங்க அவர்களாலும் திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 03 ஆனது பொலிஸ் பரிசோதகர் திரு. ஏ.ஆர்.பி.எம்.எஸ்.பண்டா அவர்களாலும் திடீர் சுற்றிவளைப்புப்பிரிவு 04 ஆனது பிரதான பொலிஸ் பரிசோதகர் திரு. ஆர்.டி.ஜெ. புஸ்பகுமார அவர்களாலும் நிர்வகிக்கப்படுகிறது.

இலஞ்சம் கோரும் போதும் பெற்றுக்கொள்ளும் போதும் அல்லது வழங்கும் போதும் அவற்றை குறிப்பிட்டு ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் சம்பந்தமாக உடனடியாக செயற்பட்டு சுற்றிவளைப்புக்களை மேற்க்கொண்டு கிரமமாக அப்புலனாய்வின் முன்னேற்றம் பற்றி மேற்பார்வை உத்தியோகத்தருக்கு அறிக்கை சமர்ப்பிப்பது இப்பிரிவின் பணியாகும்.

### 4.3.5. பொறுப்பதிகாரி ( நீதிமன்ற செயற்பாட்டுப்பிரிவு )

இப்பிரிவானது பொலிஸ் பரிசோதகர் திரு. கே.கே.பிரேமசிரி அவர்களால் தலைமை தாங்கப்படுகிறது. ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சம்பந்தமாக சட்டப்பிரிவிற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கல் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தொடர்பாக செயலாற்றுதல், நீதிமன்ற கட்டளைப்படி சந்தேக நபர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், அழைப்பாணைகளை நடைமுறைப்படுத்துதல் இப்பிரிவின் பணியாகும்.

### 4.3.6 பொறுப்பதிகாரி காவற்றுறை நிருவாகப்பிரிவு

இப்பிரிவானது உதவி பொலிஸ் பரிசோதகர் திரு. என்.எஸ்.எஸ்.ஏ. நந்தசேன அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. புலனாய்வுப்பிரிவோடு இணைக்கப்பட்டுள்ள சகல பொலிஸ் அலுவலர்களினதும் நிர்வாக செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

## 4.4. 2017 ஆம் ஆண்டின் முறைப்பாடுகள் மற்றும் புலனாய்வு முன்னேற்றம்

**அட்டவணை இல - 08**

| 2017ல் பெறப்பட்ட முறைப்பாடுகள் | | | 2017ல் பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகள் | சென்ற ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்பட்டவை | ஆரம்ப புலனாய்வின் பின் கிடைக்கப்பெற்ற கோவைகள் | புலனாய்வு நிறைவு செய்யப்பட்ட கோவைகள் | 31.12.2017 ல் நிலுவையிலுள்ள புலனாய்வு கோவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| இலஞ்சம் | ஊழல் | சொத்து | | | | | |
| 790 | 1819 | 543 | 3152 | 3986 | 7138 | 3425 | 3945 |

## 4.5. 2017 ஆம் ஆண்டின் திடீர் சுற்றிவளைப்புக்கள்

**அட்டவணை இல - 09**

| விபரம் | தொகை |
|---|---|
| மொத்த திடீர் சுற்றிவளைப்புக்கள் | 79 |
| வெற்றிகரமான திடீர் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை | 36 |
| பின்னடைவான திடீர் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை | 03 |
| வெற்றியளிக்காத திடீர் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை | 20 |
| பிற்போடப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை | 23 |
| கைது செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 51 |

**பின்னடைவான திடீர் சுற்றிவளைப்புகளில் தாக்கம் செலுத்தியுள்ள காரணிகள்**

1) பொய்யான முறைப்பாடுகள்
2) பிழையான எண்ணக்கருவுடன் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்
3) புலனாய்வு உத்தியோகத்தரின் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க பயப்படுதல்.

## 4.6. 2017 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட கைதுகளின் விபரம்

**அட்டவணை இல - 10**

| கைது செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் பதவிகளும் நிறுவனங்களும் | கைது செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| **கல்வி திணைக்களம்**<br>• அதிபர்<br>• உதவி அதிபர் | 02<br>01 | 03 |
| **தொழில் திணைக்களம்**<br>• தொழில் உத்தியோகத்தர் | 01 | 01 |
| **மாவட்ட செயலகம்**<br>• கிராம உத்தியோகத்தர்<br>• குடியேற்ற உத்தியோகத்தர்<br>• தொழிநுட்ப அதிகாரி<br>• பிரஜைகள் | 04<br>01<br>01<br>02 | 08 |
| **பிரதேச சபை நகர சபை**<br>• பிரதேச சபையின் முன்னாள் தலைவர்<br>• பிரதேச சபையின் செயலாளர்<br>• கண்காணிப்பாளர்<br>• வீதி பணியாளர்<br>• அலுவலக உதவியாளர் | 01<br>01<br>01<br>01<br>01 | 05 |
| **இலங்கை பொலிஸ்**<br>• உதவி பொலிஸ் பரிசோதகர்<br>• பொலிஸ் சாஜன்<br>• பொலிஸ் கான்ஸ்டபல்<br>• உதவி பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>• பிரஜைகள் | 02<br>05<br>03<br>01<br>01 | 12 |
| **வீதி பயணி போக்குவரத்து அதிகார சபை**<br>• பிரஜைகள் | 01 | 01 |

| | | |
|---|---|---|
| **வன பாதுகாப்பு திணைக்களம்**<br>• வன பாதுகாப்பு கள உதவியாளர்<br>• பீட் வன பாதுகாப்பு உத்தியோகத்தர் | 01<br>01 | 02 |
| **மது வரி திணைக்களம்**<br>• மது வரி உத்தியோகத்தர்<br>• சாரதி<br>• மது வரி அலுவலர் | 01<br>01<br>01 | 03 |
| **சுகாதார திணைக்களம்**<br>• சிறப்பு மருத்துவர்<br>• பொது சுகாதார பரிசோதகர்<br>• சுகாதார அலுவலக உதவியாளர்<br>• சிவில் உதவியாளர் | 01<br>01<br>01<br>01 | 04 |
| **இலங்கை இராணுவம்**<br>• சிப்பாய் | 01 | 01 |
| **மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**<br>• பிரஜைகள் -சேவைகளை பெற்றுக்கொள்ளும் போது<br>• அலுவலக உதவியாளர் | 02<br>01 | 03 |
| **மக்கள் வங்கியின் காப்புறுதி கிளை**<br>• தற்காலிக மதிப்பீட்டாளர் | 01 | 01 |

# சட்டப்பிரிவு

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழு சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நாயகம் அவர்கள் சட்டப்பிரிவின் தலைமை உத்தியோகத்தராக கடமையாற்றுவார். பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுமுகமாக பிரதி பணிப்பாளர் நாயகம் தரத்தில் 02 உத்தியோகத்தர்களும், உதவி பணிப்பாளர் நாயகம் தரத்தில் 04 உத்தியோகத்தர்களும், உதவிப்பணிப்பாளர் (சட்டம்) தரத்தில் 22 உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்

சனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன அவர்கள் பணிப்பாளர் நாயகமாக 24.11.2016 இலிருந்து கடமையாற்றி வருவதுடன் திருமதி. எஸ்.ஐ.ஜயசிங்க அவர்களும் திருமதி. எம்.பி.ஆர்.செனவிரத்ன அவர்களும் பிரதிப்பணிப்பாளர் நாயகங்களாக பணியாற்றி வருகின்றனர்.


சுயாதீன சட்டப்பிரிவொன்றை ஆணைக்குழு தன்வசம் கொண்டிருப்பதோடு இப்பிரிவினால் சாட்சியங்கள் நெறிபடுத்தப்பட்டு குற்றப்பத்திரிக்கையும் தயார் செய்யப்படுகிறது. இது தவிர சட்டப்பிரிவு அலுவலர்கள் ஆணைக்குழுவிற்காக முறைப்பாட்டாளர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராகி வழக்குகளை நடாத்தி செல்கின்றனர்.

## 5.1. 2017 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

**அட்டவணை இல - 11**

| | நீதவான் நீதிமன்றம் | உயர் நீதிமன்றம் |
|---|---|---|
| 2017 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | **32** | **41** |
| 2017.12.31 ம் திகதியன்று நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | **111** | **277** |

வரைபு இல - 04




### 5.2. 2017.12.31 வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

*நீதவான் நீதிமன்றம் 73*

அட்டவணை இல - 12

| இலஞ்சம் | ஊழல் | வெளிப்படுத்தாத சொத்துக்கள் பொறுப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 07 | 19 | 06 | 32 |

**உயர் நீதிமன்றம்**

அட்டவணை இல - 13


| இலஞ்சம் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | மொத்தம் |
|---|---|---|
| 38 | 03 | 41 |

## 5.3. 2014 – 2017 வரை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

**அட்டவணை இல - 14**

| வருடம் | நீதவான் நீதிமன்றம் | | | உயர் நீதிமன்றம் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | இலஞ்சம் | ஊழல் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | இலஞ்சம் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | |
| 2014 | 10 | 02 | 00 | 51 | 01 | 64 |
| 2015 | 13 | 09 | 10 | 76 | 00 | 108 |
| 2016 | 04 | 23 | 17 | 41 | 02 | 87 |
| 2017 | 07 | 19 | 06 | 38 | 03 | 73 |

**வரைபு இல - 05**



## 5.4. 2017 இல் நீதிமன்றத்தால் நிறைவு செய்யப்பட்ட வழக்குகள்

### நீதவான் நீதிமன்றம் - 20

**அட்டவணை இல - 15**

| | இலஞ்சம் | ஊழல் | வெளிப்படுத்தாத சொத்துக்கள் / பொறுப்புக்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவை | 02 | - | 16 | 18 |
| நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டவை | 02 | - | - | 02 |

### உயர் நீதிமன்றம் 69

**அட்டவணை இல - 16**

| | இலஞ்சம் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவை | 39 | - | 39 |
| நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டவை | 29 | - | 29 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் மரணித்தமை | 01 | - | 01 |

## 5.5. 2014 - 2017 வரை தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை

**அட்டவணை இல - 17**

| வருடம் | நீதவான் நீதிமன்றம் | | | | | | உயர் நீதிமன்றம் | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவை | | | நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டவை | | | குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டவை | | நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டவை | | |
| | இலஞ்சம் | ஊழல் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | இலஞ்சம் | ஊழல் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | இலஞ்சம் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | இலஞ்சம் | சட்டவிரோத சொத்துக்குவிப்பு | |
| 2014 | 01 | - | - | - | - | - | 21 | - | 32 | 04 | 58 |
| 2015 | 05 | 02 | - | 04 | - | - | 08 | - | 32 | 01 | 52 |
| 2016 | 02 | - | - | 06 | - | - | 12 | 01 | 12 | 01 | 34 |
| 2017 | 02 | - | - | 02 | - | - | 39 | - | 29 | - | 88 |

# நிருவாகப்பிரிவு

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவின் நிர்வாகப்பிரிவின் செயற்பாடுகளானது இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தரான திரு. ஆர்.எம்.எஸ்.ஏ. அதிகாரி அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

## 6.1. 31.12.2017 ம் திகதியன்று சட்டம் மற்றும் நிர்வாகப்பிரிவுகளின் ஆளணி மற்றும் வெற்றிடம்

**அட்டவணை இல – 18**

| பதவிப்பெயர் | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|
| தவிசாளர் | 1 | 1 | 0 |
| ஆணையாளர் | 2 | 2 | 0 |
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| செயலாளர் | 1 | 1 | 0 |
| மேலதிகப்பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| பிரதிப்பணிப்பாளர் நாயகம் | 5 | 2 | 3 |
| பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 0 |
| பிரதான கணக்காளர் | 1 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர் /பதில் பணிப்பார் ( ஊழல் தடுப்பு) | 1 | 0 | 1 |
| உதவிப்பணிப்பாளர் / பதில் பணிப்பார் (திட்டமிடல்) | 1 | 0 | 1 |
| உதவிப்பணிப்பாளர் நாயகம் (சட்டம்) | 10 | 7 | 3 |
| உதவி பணிப்பாளர் (சட்டம்) | 30 | 19 | 11 |
| பொறியியலாளர் | 1 | 0 | 1 |
| கணக்காளர் | 3 | 0 | 3 |
| மதிப்பீட்டாளர் | 2 | 0 | 2 |
| உதவி / பதில் ஆணையாளர் | 1 | 0 | 1 |
| கணக்காய்வு பரிசோதகர் | 1 | 0 | 1 |

| | | | |
|---|---|---|---|
| சுங்க பரிசோதகர் | 1 | 0 | 1 |
| பணிப்பாளர் (கட்புல,செவிப்புல) | 1 | 0 | 1 |
| நிர்வாக அலுவலர் | 3 | 0 | 3 |
| மொழி பெயர்ப்பாளர் | 4 | 2 | 2 |
| தகவல் தொழிநுட்ப அலுவலர் | 1 | 1 | 0 |
| புலனாய்வு அதிகாரி | 200 | 0 | 200 |
| உளவுத்துறை அதிகாரி | 10 | 0 | 10 |
| வரவு செலவு திட்ட உதவியாளர் | 1 | 1 | 0 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 4 | 3 | 1 |
| ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 50 | 0 | 50 |
| சட்ட உதவியாளர் | 17 | 0 | 17 |
| செய்தி அலுவலர் | 1 | 0 | 1 |
| நூலகர் | 1 | 1 | 0 |
| உதவி மதிப்பீட்டுப்பணிப்பாளர் | 2 | 0 | 2 |
| போக்குவரத்து உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| தகவல் தொழிநுட்ப உதவியாளர் | 3 | 1 | 2 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 110 | 53 | 57 |
| சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) | 4 | 0 | 4 |
| சுருக்கெழுத்தாளர் (தமிழ்) | 2 | 0 | 2 |
| சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) | 4 | 0 | 4 |
| தட்டெழுத்தாளர் (சிங்களம்) | 14 | 0 | 14 |
| தட்டெழுத்தாளர் (தமிழ்) | 4 | 0 | 4 |
| தட்டெழுத்தாளர் (ஆங்கிலம்) | 4 | 0 | 4 |
| சாரதி | 45 | 35 | 10 |
| குழாய் திருத்துபவர் | 1 | 0 | 1 |
| காற்று சீரமைப்பி திருத்துபவர் | 1 | 0 | 1 |
| நூலக உதவியாளர் | 1 | 0 | 1 |

| | | | |
|---|---|---|---|
| ஆவண உதவியாளர் | 2 | 0 | 2 |
| அலுவலக உதவியாளர் | 45 | 38 | 7 |
| சுத்திகரிப்பு தொழிலாளர் | 20 | 0 | 20 |
| காவலாளி | 15 | 0 | 15 |
| மொத்தம் | 635 | 170 | 465 |

*மூலம் :- நிர்வாகப்பிரிவிலிருந்து பெறப்பட்டது.*

## 6.2. மனித வள அபிவிருத்தி

உத்தியோகத்தர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் விருத்திக்காக பின்வரும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சிகளின் விபரம்**

**அட்டவணை இல - 19**

| இல | பயிற்சி / மாநாடுகள் நடாத்தப்பட்ட நிறுவனம் | பயிற்சி / மாநாட்டின் பெயர் | பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | அரசாங்க கொள்முதல் நடைமுறை பற்றிய விளக்கம் | திரு.கே. ஹஷித பிரபாஸ் (அ.மு.உ) | 27 மற்றும் 28 பெப்ரவரி 2017 |
| 02 | கட்டுமான உபகரண பயிற்சி மையம் | வலையமைப்பு விநியோக முகாமைத்துவம் | திரு.கே. ஹஷித பிரபாஸ் (அ.மு.உ) | 05 வியாழக்கிழமைகள் 23.02.2017 முதல் |
| 03 | கட்டுமான உபகரண பயிற்சி மையம் | மின்னாக்கிகளின் பயன்பாடும் பராமரிப்பும் | திரு.ஈ.ஏ.வை. தயாரத்ன (அ.மு.உ) | 01 மற்றும் 02 மார்ச் 2017 |
| 04 | கட்டுமான உபகரண பயிற்சி மையம் | பண்டக காப்பு | திரு.கே.டி.ஏ. சானக | 05 வெள்ளிக்கிழமைகள் 24.03.2017 முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | அலுவலக உதவியாளர்களின் பணிகளும் பொறுப்புகளும் | திருமதி.எச்.எம்.பீ.கே. ஹேரத்<br>திரு.ஆர்.டி. இசுரு சந்தருவான் | 25 மற்றும் 26 மே 2017 |
| 06 | பிரக் பயிற்சி நிலையம் | வாகன முகாமைத்துவம் | திரு.எம்.ஏ.லக்மால் (அ.மு.உ) | 28.06.2017 |
| 07 | தேசிய தொழில் கல்வி நிலையம் | அலுவலக முறைமை மற்றும் நிதிப்பிரமாணம் | திருமதி சுஜீவா பிரியதர்ஷினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்)<br>செல்வி.வை.எம்.எல்.ஐ.இரேஷா (அ.மு.உ) | 04 மற்றும் 05 யூலை 2017 |
| 08 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | தொலைபேசி பாவனை மற்றும் நெறிமுறை | திருமதி.யூ.ஏ.கோரள | 17 மற்றும் 18 யூலை 2017 |
| 09 | கட்டுமான உபகரண பயிற்சி மையம் | நிறுவன உற்பத்தி திறனில் அலுவலக உதவியாளர்களின் பணி | திரு.டி.எல்.டி. துஷித குமார அலுவலக உதவியாளர்<br>திரு.சானக புஸ்பகுமார அலுவலக உதவியாளர் | 25.08.2018 |
| 10 | கட்டுமான உபகரண பயிற்சி மையம் | பண்டக காப்பு | திரு.பி.எம். சிசிர குமார (அ.மு.உ) | 5 வியாழக்கிழமைகள் 07.09.2017 முதல் |
| 11 | கட்டுமான உபகரண பயிற்சி மையம் | பண்டக காப்பு சான்றிதழ் பாடநெறி | திரு.பி.எம். சிசிர குமார (அ.மு.உ) | 5 வியாழக்கிழமைகள் 19.10.2017 முதல் |
| 12 | திறன்கள் அபிவிருத்தி நிதியம் | MS WORD EXCEL INTERNET EMAIL பாவனை | திருமதி.களனி விஜேரத்ன (அ.மு.உ)<br>திரு. கயானி மதுரங்கி (அ.மு.உ)<br>திருமதி. ஆர்.பி.ஜே. ராஜபக்ஷ (அ.மு.உ) | 5 புதன்கிழமைகள் 23.02.2017 முதல் |
| 13 | தேசிய தொழில் கல்வி நிலையம் | தகவலறியும் சட்டம் தொடர்பான பயிற்சி | திருமதி. கே. எம்.ஆர்.டி.எஸ். ஹேவாவசம் ( உதவிப்பணிப்பாளர் - சட்டம்) | 2017.11.15 |

## 2017 வெளிநாட்டு செயலமர்வுகளும், பயிற்சிநெறிகளும்

**அட்டவணை இல - 20**

| இல | பயிற்சி / மாநாடுகள் நடாத்தப்பட்ட நிறுவனம் | பயிற்சி/ மாநாட்டின் பெயர் | பங்குபற்றிய உத்தியோகத்தர் | நடைபெற்ற திகதி |
|---|---|---|---|---|
| 01 | துபாய் | ISS மத்திய கிழக்கு 2017 | நீதியரசர்.டிப்ளியூ. ரஞ்சித் சில்வா ஆணையாளர் | 13.03.2017 முதல் 15.03.2017 வரை |
| 02 | வடகொரியா | ARC பயிற்சி சர்வதேச ஊழல் எதிர்ப்பு நிபுணர்களுக்கு | திருமதி.எம்.ஆர். வை.கே. உடவெல உதவி பணிப்பாளர் நாயகம் | 17.04.2017 முதல் 26.04.2017 வரை |
| 03 | ஹாங்கொங் | ICAC நிதி புலனாய்வு பற்றிய சர்வதேச கருத்தரங்கு | திரு. நெவில் குருகே ஆணையாளர்<br>திரு. சரத் ஜயமான்ன பணிப்பாளர் நாயகம் | 09.05.2017 முதல் 12.05.2017 வரை |
| 04 | சிங்கப்பூர் | சிங்கப்பூரின் ஊழலிற்கெதிரான உத்திகள் பாடநெறி | திருமதி. துசாரி தயாரத்ன உதவி பணிப்பாளர் (சட்டம்) | 29.05.2017 முதல் 02.06.2017 வரை |
| 05 | சீனா | 2017 நிதிசேவைகள் மற்றும் வளர்ந்து வரும் நாடுகளுக்கான ஒத்துழைப்புகள் பற்றிய கருத்தரங்கு | திரு. டப்ளியூ. எம்.டீ.டி. பண்டார பிரதான கணக்காளர் | 02.06.2017 முதல் 22.06.2017 வரை |
| 06 | சீனா | வளர்ந்து வரும் நாடுகளில் நிலையான சனத்தொகை அதிகரிப்பு மற்றும் வறுமை சுட்டி வீதத்தை குறைத்தல் பற்றிய கருத்தரங்கு | திரு. ஏ. எம். ஆர். எஸ். ஏ. அதிகாரி | 07.06.2017 முதல் 21.06.2017 வரை |
| 07 | வியன்னா | ஊழலிற்கெதிரான ஐ.நா மாநாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஆய்வு குழுவின் 8வது அமர்வு | நீதியரசர். டப்ளியூ.எல். ரஞ்சித் சில்வா ஆணையாளர்<br>திரு. சரத் ஜயமான்ன பணிப்பாளர் நாயகம்<br>செல்வி. எம். எம். முனசிங்க | 14.06.2017 முதல் 23.06.2017 வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உதவி பணிப்பாளர் நாயகம்<br><br>திருமதி. கே.எச்.ஐ.எஸ். சிறிவர்தன<br>உதவி பணிப்பாளர் நாயகம் | |
| 08 | மலேசியா | ஊழலுக்கெதிரான தந்திரோபாய முகாமைத்துவ பாடநெறி | திருமதி. ஜயன்ந்த பத்மினி<br>உதவி பணிப்பாளர் (புலனாய்வு) | 21.08.2017 முதல் 23.08.2017 வரை |
| 09 | வியன்னா | UNCAC திறந்த - பூர்த்தியான அரசுகளுக்கிடையேயான தொழில் குழு கூட்டம் | திருமதி. ஜே.எம். எஸ்.ஐ. ஜயசிங்க<br>பதில் பணிப்பாளர் நாயகம்<br><br>திருமதி. டி.ஐ. ராஜபக்ஷ<br>உதவிப்பணிப்பாளர் (சட்டம்)<br><br>செல்வி. டப்ளியூ. எம்.டி.டீ.. பண்டார<br>உதவி பணிப்பாளர் (சட்டம்) | 21.08.2017 முதல் 23.08.2017 வரை |
| 10 | மலேசியா | ஊழல் முகாமைத்துவம் பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ளலிற்கான மாநாடு ( 3ம் குழு ) | திருமதி. டிஜி. ஜே. ஹெயன்துடுவ<br>உதவிப்பணிப்பாளர் நாயகம்<br><br>திரு.அசித அந்தோனி<br>உதவி பணிப்பாளர் நாயகம்<br><br>திரு. ஜி. டி. மாதுவகே<br>உதவிப்பணிப்பாளர் (சட்டம்)<br><br>திருமதி. எஸ்.ஏ.ஏ.பீ.கே. சம்மந்த பெரும<br><br>திருமதி. கே.எம்.ஆர்.டி.எஸ். ஹேவாவசம்<br>உதவிப்பணிப்பாளர் (சட்டம்)<br><br>திருமதி.எஸ்.ஏ.பி. சேதனா | 21.08.2017 முதல் 25.08.2017 வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | உதவிப்பணிப்பாளர் (சட்டம்)<br><br>செல்வி. பி. டப்ளியூ. பி. யூ. குமாரிஹாமி உதவிப்பணிப்பாளர் (சட்டம் | |
| 11 | மலேசியா | | திரு.கே.கே. சிரிவர்தன தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் | 17.09.2017 முதல் 07.10.2017 வரை |
| 12 | எகிப்து | கட்சிகளின் ஆறாவது அமர்வு | திருமதி. எம்.பீ.ஆர். செனவிரத்ன பதில் பணிப்பாளர் நாயகம் | 02.10.2017 முதல் 04.10.2017 வரை |
| 13 | மலேசியா | MACC ன் 50வது ஆண்டு விழாவும் புதிய தலைமையகத்தின் திறப்பு விழாவும் | திரு. சரத் ஜயமான்ன பணிப்பாளர் நாயகம் | 01.10.2017 |
| 14 | மலேசியா | அபிவிருத்தி நிர்வாக நவீனமயமாக்கல் மற்றும் மாற்றம் | திரு. ஏ. எம். ஆர். எஸ். ஏ. அதிகாரி | 25.10.2017 |
| 15 | பாங்கொக் | ACAS ன் ஆரம்ப தொகுப்பு பற்றி அறிந்துக்கொள்வதற்கான அழைப்பு | நீதியரசர். டப்ளியூ.எல். ரஞ்சித் சில்வா ஆணையாளர் | 25.10.2017 |
| 16 | வியன்னா | UNCAC ன் 7வது மாநாடு | திரு. சரத் ஜயமான்ன பணிப்பாளர் நாயகம்<br><br>திரு.டி.பிரியந்த சந்திரசிரி பணிப்பாளர் ( புலனாய்வு) | 06.11.2017 முதல் 10.11.2017 வரை |
| 17 | தொகா கடார் | மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் | திருமதி. ஆர். எம்.வீ.எஸ். ஜயசேகர | 12.11.2017 முதல் 16.11.2017 வரை |
| 18 | தென் கொரியா | 22ஆவது ADB/OECD ன் ஆசியா மற்றும் பசுபிக் ன் ஊழலுக்கெதிரான ஆரம்பத்திற்கான 22வது திசைதிருப்பல் மற்றும் ஆலோசனை கூட்டம் | நீதியரசர். டப்ளியூ.எல். ரஞ்சித் சில்வா ஆணையாளர்<br><br>திருமதி.எம்.எம். முனசிங்க உதவி பணிப்பாளர் நாயகம் | 15.11.2017 முதல் 17.11.2017 வரை |
| 19 | மாலைதீவுகள் | பிராந்திய செயலமர்வு: | நீதியரசர். டப்ளியூ.எல். | 15.11.2017 முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தென்னாசியாவின் ஊழலிற்கெதிரான போராட்டத்தில் குரல் எழுப்புவோர் மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பு | ரஞ்சித் சில்வா ஆணையாளர்<br><br>திருமதி.எம்.ஆர்.வை.கே உடவெல உதவி பணிப்பாளர் நாயகம்<br><br>திருமதி.கே.எம்.ஏ. சிரிவர்தன உதவிப்பணிப்பாளர் (சட்டம்) | 17.11.2017 வரை |
| 20 | வொசிங்டன் | சொத்து மீட்பிற்கான உலகளாவிய அமர்வு | சனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன பணிப்பாளர் நாயகம்<br><br>திரு.எம்.டி.டி ருவான் குமார உதவிப்பணிப்பாளர் (புலனாய்வு)<br><br>திரு. இந்திக தர்மதாச பொலிஸ் பரிசோதகர் | 03.12.2017 முதல் 11.12.2017 வரை<br><br>04.12.2017 முதல் 06.12.2017 வரை |

## 6.3. போக்குவரத்துப்பிரிவு

2017 ஜுன் 30 ஆம் திகதியன்று ஆணைக்குழுவானது தன் வசம் வைத்திருந்த மொத்த வாகனங்கள் 48 ஆவதுடன் அதில் 08 மோட்டார் சைக்கிள்களாகும். அவை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இல - 21**

| வாகனப்பிரிவுகள் | தொகை |
|---|---|
| இரட்டை பாவனைக்குரிய வாகனங்கள் | 12 |
| மோட்டார் கோச்கள் | 03 |
| மோட்டார் கார்கள் | 17 |
| உந்துருளிகள் | 08 |
| மொத்தம் | 40 |

## 2017 ஆகஸ்டில் ஆணைக்குழுவிற்கு வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள்

**அட்டவணை இல - 22**

| வாகன வகைகள் | தொகை |
|---|---|
| மோட்டார் கார்கள் | 03 |
| வேன் | 05 |

•

7

# நிதிப்பிரிவு

இப்பிரிவானது நிதி முகாமைத்துவத்தின் சீரான செயற்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவானது கணக்காளர் சேவையின் தரம் 1 உத்தியோகத்தரான திரு.டப்ளியூ.எம்.டி. பண்டார அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. நிதி முகாமைத்துவம், நிதி அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் என்பன இப்பிரிவின் முக்கிய நோக்கங்களாகும்

**7.1. நிதிப்பிரிவின் முக்கிய செயற்பாடுகள்**

ஆணைக்குழுவின் சகல நிதி செயற்பாடுகளும் இப்பிரிவினால் முகாமைத்துவபடுத்தப்படுவதோடு நிதிபிரதிக்கினைகளை தயார் செய்தல் இப்பிரிவின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். இதற்கு மேலதிகமாக அலுவலக உபகரணங்களையும் காகிதாதிகளையும் கொள்வனவு செய்வதும் ஆணைக்குழுவின் வேண்டுதலுக்கிற்கிணங்க அச்சுப்பதிப்பு வேலைகளை பூர்த்தி செய்து கொடுப்பதும் இப்பிரிவின் பணியாகும்

**நிதிப்பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு அமையும்**

1) புலனாய்வுப்பிரிவு தவிர்ந்த ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களினதும் சம்பளம் வழங்குதல் உள்ளிட்ட அனைத்து வழங்குதல்களையும் மேற்க்கொள்ளல்.
2) வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்வதும் வரவு செலவை மதிப்பிடுவதும்
3) கொடுப்பனவு மற்றும் பெறுகை சம்பந்தமான கணக்குகளை நடாத்தி செல்லல்
4) அரச ஊழியர்களின் முற்பண பி கணக்கை நடாத்தி செல்லல்
5) திடீர் சுற்றிவளைப்புக்களுக்கு தேவையான பணத்தை வழங்குவதும் திடீர் சுற்றிவளைப்பு முற்பண கணக்குகளை நடாத்தி செல்வதும்

**7.2. 2017 ஆம் ஆண்டுக்கான பொது திறைசேரியின் நிதி ஒதுக்கீடு மற்றும் 31.12.2017 அன்று உண்மையான செலவின விபரங்கள்**

**அட்டவணை இல - 23**

| 2017.12.31 ஆம் திகதியில் | | | |
|---|---|---|---|
| விபரம் | அதிகபட்ச செலவு ரூபா | அதிகபட்ச வரவு ரூபா | அதிகபட்ச பற்றுகள் ரூபா |
| முற்பண பி கணக்கு | | | |
| ஒதுக்கீட்டு மசோதா மூலம் பரிந்துரைக்கப்படும் வரம்பு | 7,500,000.00 | 4,000,000.00 | 30,000,000.00 |
| 31.12.2017 இல் உண்மை தொகை | 6,976,151.00 | 4,500,410.79 | 16,608,246.21 |
| திடீர் சுற்றிவளைப்பு முற்பணம் | | | |
| ஒதுக்கீட்டு மசோதா மூலம் பரிந்துரைக்கப்படும் வரம்பு | 150,000,000,.00 | 2,000,000.00 | 275,000,000.00 |
| 31.12.2017 இல் உண்மை தொகை | 3,109,000.00 | 2,689,920.00 | 18,952,381.98 |

*மூலம் :- நிதிப்பிரிவிலிருந்து பெறப்பட்டது.*

# தடுப்புப்பிரிவு

### 8.1.விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

2017 இல் பணிப்பாளர் நாயகம் மற்றும் சட்ட உத்தியோகத்தர்களின் பங்குபற்றத்தலுடன் இலஞ்சம் மற்றம் ஊழலை தடுப்பதற்கான பல மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

**2017 இல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட தடுப்பு நிவாரண மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள்**

**அட்டவணை இல - 24**

| இல | நிறுவனம் | ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் | தலைப்பு / விடயப்பரப்பு | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | வெலிகம பிரதேச செயலகம் | திருமதி. அனுராதா சிரிவர்தன<br>உதவி பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் மற்றும் ஊழலை தடுத்தல் | 60 |
| 02 | தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூாரி | திரு.சரத் ஜயமான்ன பணிப்பாளர் நாயகம்<br><br>திருமதி.எஸ். சிரிவர்தன உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | சட்டமா அதிபரும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவும் | 16 |
| 03 | போக்குவரத்து பொலிஸ் தலைமையகம் | செல்வி.டி. பண்டார உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் மற்றும் ஊழல் | 76 |
| 04 | நீதி அமைச்சு | திருமதி. டி.ஜ. ராஜபக்ஷ<br>உதவிப் பணிப்பாளர் (சட்டம்)<br><br>திரு.ஜி. மாதுவகே<br>உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்ச சட்டம் | 170 |
| 05 | சிறைச்சாலைகள் திணைக்களம் | திருமதி. விக்ரமசிங்க உதவிப் பணிப்பாளர் நாயகம் | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவின் கடமைகள் | 104 |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | பிரதான பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலயம் | திருமதி.எஸ். சிரிவர்தன உதவிப் பணிப்பாளர் நாயகம் (சட்டம்)<br><br>திருமதி. டி.ஜ. ராஜபக்ஷ உதவிப் பணிப்பாளர் (சட்டம்)<br><br>திரு.எஸ்.எம். சப்ரி உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் ஊழல் மற்றும் அதன் தாக்கம் | 250 |
| 07 | போக்குவரத்து பொலிஸ் தலைமையகம் | திருமதி.ஆர்.வை.கே. உடவெல (உதவி பணிப்பாளர் நாயகம்) | இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டங்கள் | 80 |
| 08 | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் | திரு.டி.பண்டார உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் மற்றும் ஊழலிலிருந்து விலகியிருத்தல் | 150 |
| 09 | தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரி | திரு.டி.பண்டார உதவிப் பணிப்பாளர் (சட்டம்)<br><br>திரு.இந்திக தர்மதாச பொலிஸ் பரிசோதகர் | | 20 |
| 10 | பதிவாளர் நாயகம் காரியாலயம் | திருமதி. டி.ஜ. ராஜபக்ஷ உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் மற்றும் ஊழல் | 20 |
| 11 | லயன்ஸ் கழகம் தலன்கம மாலபே | திருமதி. டி.ஜ. ராஜபக்ஷ உதவிப் பணிப்பாளர் (சட்டம்)<br><br>திரு.டி.பண்டார உதவி பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் மற்றும் ஊழல் | 105 |
| 12 | சீர்திருத்த மற்றும் நன்னடத்தை பயிற்சி நிலையம்<br><br>சிறைச்சாலைகள் திணைக்களம் | திரு. விஜயசிரி லியனகே பொலிஸ் பரிசோதகர் | இலஞ்சம் மற்றும் ஊழல் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | மத்திய சுற்றாடல் அதிகாரசபை | திருமதி.மனோதி ஹேவாவசம் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற அரச துறை | 150 |
| 14 | பொலிஸ் நிலையம் இராகமை | திருமதி. டி.ஐ. ராஜபக்ஷ உதவிப் பணிப்பாளர் (சட்டம்)<br><br>திரு.நுவன் சிரி | இலஞ்சம் பெறுவதன் தாக்கம் | 60 |
| 15 | சீர்திருத்த மற்றும் நன்னடத்தை பயிற்சி நிலையம்<br><br>சிறைச்சாலைகள் திணைக்களம் | திருமதி. ஏ. சம்மந்த பெரும உதவிப் பணிப்பாளர் (சட்டம்) | இலஞ்சம் மற்றும் ஊழல் | 100 |

# இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் விசேட செயற்றிட்டங்கள்

## 9.1. சட்டத்திருத்தங்கள்

ஆணைக்குழுவின் சட்டங்கள் 24 வருடங்களாக திருத்தப்படவில்லை. இலஞ்சம் மற்றும் ஊழலுடன் தொடர்புடைய சட்டத்தை திருத்தியமைத்தல் காலத்தின் தேவைப்பாடாகும். பல நாடுகள் புதிய குற்றப்போக்குகளுக்கமைய சட்டங்களை புதுப்பிக்க நடவடிக்கைகளை மேற்க்கொண்டு வருகின்றன. அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தத்தின் 156 (அ) பிரிவிற்கமைய ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஊழலிற்கெதிரான சமவாயத்தின் ஏற்பாடுகளிற்கிணங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆணைக்குழு அதன் சட்டங்களை திருத்தியமைக்கவுள்ளது.

**ஆணைக்குழுவுடன் தொடர்புடைய சட்டங்கள்**

- இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவின் 1994 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க சட்டம்
- 1954 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க இலஞ்ச சட்டம்
- 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் சட்டம்

சட்டத்திருத்தம் தொடர்பான பிரேரணை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதிக்கு சமர்பிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியால் அமைச்சரவைக்கும் சமர்பிக்கப்பட்டது. அதன் பிரதிபலனாக 2017 நவம்பர் 07 ஆம் திகதி மேற்படி சட்டத்திருத்தத்திற்கான அனுமதி அமைச்சரவையால் வழங்கப்பட்டதுடன் அமைச்சரவையால் பிரேரணையை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இவ் ஆணைக்குழுவானது அமைச்சரவை அனுமதியுடனான சட்டத்திருத்தங்களை சட்ட வரைஞருடன் இணைந்து மேற்க்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

## 9.2. தேசிய செயல் திட்டம் [NAP]

அமைச்சரவையின் ஒப்புதலின் படி தேசிய செயல் திட்டத்தை உருவாக்க பல கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நடைபெற்றன. இவ்விடயத்தில் தமது பங்களிப்பை வழங்குவதற்காக சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற நிபுணர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து தமது மகத்தான உதவியை நல்கினர்.

**நோக்கம்**

நிலையான பொருளாதார சமூக, சட்ட மற்றும் சுற்றுசூழல் இலக்குகளை அடைவதன் மூலம் சிறந்த நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய செயல் திட்டத்தின் மூலம் இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழித்தல்.

**பின்னணி**

இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தினால் GSP+ சலுகையை 2017 மே மாதம் முதல் பெற்றுக்கொண்டது. GSP+ சலுகையை மீண்டும் பெற இலங்கையானது ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டபூர்வ கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அதற்கான தேவைப்பாடாக ஒரு நல்லாட்சி அமைப்பை உருவாக்க வேண்டும். GSP+ சலுகையை பெற இலங்கையானது 4 அம்சங்களின் கீழ் கண்கானிக்கப்படும் அதில் ஒன்று நிர்வாக முறை. இது ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கொதிரான சமவாயத்தினை செயல்படுத்த உதவுகிறது.

இலஞ்சம் மற்றும் ஊழலானது உலகின் மிக கொடிய அச்சுறுத்தலாக இனங்காணப்பட்டுள்ளது. இவ் அச்சுறுத்தலை கட்டுப்படுத்த பல்வேறு சட்டங்கள், மரபுகள், வழிமுறைகள் ஆகியவை உள்நாட்டில் மற்றும் சர்வதேச ரீதியில் நிறுவப்பட்டுள்ளன. அதன்படி ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கொதிரான சமவாயம் 2003 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2005 டிசம்பர் முதல் அமுலுக்கு வந்தது. இச்சமவாயத்தினை இலங்கை அரசு 2004 மார்ச் முதல் ஏற்றுக்கொண்டது.

இச்சமவாயத்தின் ஒரு அங்கம் என்ற வகையில் இலங்கையில் ஊழலை குறைக்க அம்மாநாட்டின் 5 (2) பிரகாரம் விதிமுறைகளை கடைபிடிக்க, சட்ட மற்றும் நிர்வாக பின்னணிகளை உருவாக்க உறுதிப்பூண்டுள்ளது.

இச்சமவாயத்தின் 156 “A” அத்தியாயத்தின் XIX “4” பிரிவின் 19 ஆம் பகுதியின் சட்ட திருத்தத்தின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவிற்கு இலஞ்சம் அல்லது ஊழலை விசாரணை செய்வதற்கான அதிகாரமானது ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கொதிரான சமவாயத்தின் சட்டங்களிற்கமைவாகவும் இலங்கை அங்கம் வகிக்கும் வேறு சமவாயங்களின் சட்டங்களிற்கமைவாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை திறந்த அரசாங்க பங்குபற்றலில் ஒரு அங்கமாகும். 2 வருட தேசிய செயல் செயற்றிட்டத்தை உருவாக்கி அரச மற்றும் தனியார் துறைகளில் ஊழலை தடுப்பது திறந்த அரசாங்க பங்குபற்றல் மூலம் வழங்கப்பட்ட ஒரு பணியாகும். திறந்த அரசாங்க பங்குபற்றலிற்கான தேசிய செயல் திட்டமானது 2015 - 2017 வரை

அமுலாக்கப்படுவதற்கான அனுமதியானது அமைச்சரவையினால் 17 ஒக்டோபர் 2016 அன்று வழங்கப்பட்டது.

இதன்படி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவிற்கு தேசிய செயல் திட்டத்தை ஜனாதிபதி செயலகம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் மேற்பார்வையின் கீழ் உருவாக்குவதற்கான அனுமதி 24.10.2017 முதல் அமைச்சரவையினால் வழங்கப்பட்டது.

ஊழலிற்கெதிரான தேசிய செயல் திட்டத்தை உருவாக்க சில படிமுறைகளை கையாள வேண்டியுள்ளது.

**ஊழலிற்கெதிரான தேசிய செயல் செயற்றிட்டத்தை உருவாக்குவற்கான படிமுறைகள்**

தேசிய செயல் திட்டத்தை உருவாக்கவும் அதனுடன் தொடர்புடைய வேறு செயற்பாடுகளை முன்னெடுக்கவும் பங்குதாரர்களிடையே புரிதல் மற்றும் ஒத்துழைப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டுக்குழுக்களை உருவாக்கல் மற்றும் அரச நிறுவனங்களின் உதவியுடன் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களை நடாத்தல். (இச்செயற்பாட்டில் தனியார்துறை சிவில் நிறுவனங்கள் பொது அரச நிறுவனங்கள் ஆகியவையும் உள்வாங்கப்பட்டுள்ளன)

செயற்பாட்டுக்குழுக்களிற்கான உறுப்பினர்கள் அரச துறைகள், ஊழலிற்கெதிரான அமைப்புகள், சிவில் அமைப்புகள், ஊடகத்துறை, பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் அபிவிருத்தி உதவியாளர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவின் இணையத்தளம் மற்றும் பிற வழிமுறைகளினூடாக இச்செயற்றிட்டத்தில் பங்களிப்பு செய்வதற்கான வாய்ப்பு பொது மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஊடகங்கள் இத்திட்டத்தை நோக்கி பொது மக்களை ஈரப்பதற்காகவும், பொது மக்களின் ஆதரவை பெறவும் உதவும் வகையில் செயற்படுகின்றன. ஊழலினால் உருவாகும் பேரழிவு நிலையினை பற்றியும் ஊழலிற்கெதிரான தேசிய செயல் திட்டத்தை பற்றியும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் பயனுள்ள ஒரு விடயமாகும்.

24.10.2017 - ஊழலிற்கெதிரான தேசிய செயல் செயற்றிட்டத்தை உருவாக்க அமைச்சரவை அனுமதி

28.11.2017 - ஊழலிற்கெதிரான தேசிய செயல் திட்டதிற்கான செயன்முறை நகலை உருவாக்குவதற்கான ஆரம்ப கூட்டம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்குமிடையில் நடைபெற்றது.

## 9.3. சர்வதேசப்பொறுப்புகள்

ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கொதிரான சமவாயத்தினை நடைமுறைபடுத்த UNODC உடன் தொடர்ச்சியான இணைப்பு பேணப்படுகிறது. மேலும் தற்போது மலேசியா, பூட்டான், ஹாங்கொங் மற்றும் மொரிஷியஸ் முதலான நாடுகளுடன் தொழிநுட்ப உதவிகளை பரிமாறும் செயற்பாடு தற்போது நடைபெற்று வருகிறது.

## 9.4. நேர்மைத்திறன் செயற்றிட்டங்கள்

அரச நிறுவனங்களில் நேர்மைத்திறன் செயற்றிட்டங்களை நடாத்துவதற்கான பிரதான காரணம் இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதாகும்.

இதனுடன் சம்பந்தப்பட்ட கலந்துரையாடல்கள் ஏற்கனவே அமைச்சு செயலகங்களுடன் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதிமேதகு ஜனாதிபதிக்கு இது தொடர்பான விழிப்பூட்டலை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டுள்ளன.

## 9.5. துறைசார் புலன் விசாரணை அலுவலர்கள் மற்றும் தடுப்பு நிவாரணப்பிரிவு

இன்றுவரை இவ்வாணைக்குழுவில் துறைசார் புலன் விசாரணை அதிகாரிகள் இல்லை ஆயினும் இப்பதவி உருவாக்கப்பட்டு ஆட்சேர்ப்புக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இவ்வாணைக்குழுவின் வரலாற்றின் ஆரம்பத்தில் தடுப்பு நிவாரணப்பிரிவு மற்றும் தடுப்பு நிவாரண அதிகாரிகள் இருக்கவில்லை. எவ்வாறாயினும் தற்போது அரச சேவையில் அவ்வாறான பதவி உருவாக்கப்பட்டு எதிர்வரும் காலங்களில் பொருத்தமான நபர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 9.6. சம்பள அதிகரிப்புகள் மற்றும் வேறு சேவை வகைகள்

வழக்காடவும் விசாரணை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றவும் தகுதி வாய்ந்த சட்ட அலுவலர்களை நியமித்தல் மிக அத்தியாவசியமான தேவைப்பாடகவுள்ளது. அமைச்சரவை பிரேரணை தயாரிக்கப்பட்டு அந்த அதிகாரிகளின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பபட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் இவ் ஆணைக்குழுவினால் சம்பளம் மற்றும் செயலணி ஆணைக்குழுவிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

## 9.7. புதிய கட்டிட நிர்மாணிப்பு

அலுவலக இடப்பற்றாக்குறையானது ஆணைக்குழுவினை வலுப்படுத்த முக்கியமான தடையாக உள்ளது. இதற்காக இவ்வாணைக்குழுவின் வளாகத்தினுள் ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் பல சுற்று பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி கிடைக்காமையினால் இது தொடர்பான நடவடிக்கைகள் முழுமையாக கைவிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக சில அதிகாரிகள் கெப்பட்டிபொல மாவத்தையில் உள்ள பழைய ஆட்பதிவு திணைக்களத்திற்கு இடம்மாற்றப்பட்டனர்.

01.06.2017 ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையின் கீழ் புதிய கட்டிடத்தை கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப பேச்சு வார்த்தை நடைபெற்றது.

12.06.2017 மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. பீ. சுரேஸ் அவர்களின் தலைமையில் நகர அபிவிருத்தி அதிகார சபையில் ஜனாதிபதியின் செயலாளரின் அறிவுறுத்தல்களிற்கமைய பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன.

(இந்த இரு சந்திப்புகளின் போதும் புதிய கட்டிட நிர்மாணிப்புக்கான ஆலோசனைகளும் ஒத்துழைப்புகளும் பெறப்பட்டன.)

14.06.2017 மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்தால் வரையப்பட்ட புதிய கட்டிட நிர்மாண வரைப்படம் உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டது.

03.07.2017 புதிய கட்டிட கட்டுமானத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பரிந்துரை வழங்கப்பட்டது

04.07.2017 நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகர்களுடன் கட்டிடத்தின் உயரம் சம்பந்தமான விஷேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

18.09.2017 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்க்கான ஆணைக்குழுவின் நிலம் இல.36 மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளரின் அலுவலக நிலம் 36/69C ஆகியவற்றை இணைத்துக்கொள்ள திட்டம் ஒன்று வரையப்பட்டது.

14.11.2017 திட்டமிடல் அதிகார சபையின் தீர்மானத்தின் படி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கொழும்பிற்கு வெளியே ஒரு இடத்தை ஆணைக்குழுவினை இடம்மாற்ற பெற்றுக் கொள்ளுமாறு எமக்கு அறிவிக்கப்பட்டது.

15.11.2017. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் புதிய கட்டிட நிர்மாணிப்பிற்கான எமது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டதாக எமக்கு அறிவிக்கப்பட்டது.

மேலும் புதிய கட்டிட நிர்மாணிப்பிற்கான ஆரம்ப கலந்துரையாடல்களிற்கான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்படுகின்றன

## 9.8. முகாமைத்துவ சேவைத்திணைக்களத்திலிருந்து பதவிகளுக்கு அனுமதி பெறல்

02.06.2017 இல் பின்வரும் பதவிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது

| | |
|---|---|
| உதவிப்பணிப்பாளர் (சட்டம்) | 05 பதவிகள் |
| உதவிப்பணிப்பாளர் (ஊழல் தடுப்பு) | 01 பதவி |
| ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் | 09 பதவிகள் |

புலனாய்வு அதிகாரிகள் 200 பேரை இணைத்துக்கொள்வதற்கான ஒப்புதல் 06.06.2017 வழங்கப்பட்டது.

பின்வரும் பதவிகளுக்கு 25.09.2017 இல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

உதவிப்பணிப்பாளர்/ பிரதிப்பணிப்பாளர் (ஊழல் தடுப்பு) பதவியை திருத்தி

உதவிப்பணிப்பாளர்/ பிரதிப்பணிப்பாளர் ( திட்டமிடல்) 01 இற்கும்

ஊழல் தடுப்பு உத்தியோகத்தர் 25 இற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

## 9.9.உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு

03 சாரதிகள்

03 சட்ட உத்தியோகத்தர்கள் உதவி பணிப்பாளர் நாயகங்களாக தரமுயர்த்தப்பட்டனர்

## 9.10. வெற்றிடங்களை நிரப்புதல்

புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்படி பதவிகளுக்கு மாத்திரம் மேற்க்கொள்ளப்பட்ட போதிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்க்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு

05 வெற்றிடங்களை நிரப்ப முகாமைத்துவ சேவைத்திணைக்களத்தின் அனுமதியை 09.01.2017 அன்று பெற்றுள்ளது. ஏற்கனவே இணைந்த சேவையின் பணிப்பாளர் நாயகத்தால் 05 சாரதிகள் மற்றும் பிரிதொரு வெற்றிடமும் நிரப்பப்பட்டுள்ளது.

சாரதிகளின் வெற்றிடங்களிற்கான விளம்பரம் 27.05.2017 அன்று வெளியிடப்பட்டு அதற்கான நேர்முகத்தேர்வுகள் 2017 ஒக்டோபர் மாதம் 10, 11, மற்றும் 12 ஆகிய திகதிகளில் நடைபெற்றன

நிதிப்பிரமாணம் 71 ஆம் பிரிவின் படி (F.R.71) 12.09.2017 திகதியன்று உதவிப்பணிப்பாளர் (ஊழல் தடுப்பு) பதவி உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆட்சேர்ப்பு செயன்முறையின் திட்டங்கள் தேசிய சம்பள மற்றும் செயலணி செயலாளருக்கு மற்றும் நிறுவன பணிப்பாளருக்கும் அனுப்பபட்டுள்ளன. நிறுவன

பணிப்பாளரின் அறிவிப்பின் படி இவ்விரு சேவை திட்டங்களும் ஒன்றிணைக்கபட்டு ஒரே சேவை திட்டமாக மாற்றப்பட்டன.

அலுவலக உதவியாளர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டன.

பரீட்சைகள் திணைக்களத்துடன் தட்டெளுத்தாளர், சுருக்கெழுத்தாளர் மற்றும் தொழிநுட்பம் சாரா முகாமைத்துவ உதவியாளர்களை இணைத்துக்கொள்ள பரீட்சை மற்றும் வர்த்தமானி வெளியீடு தொடர்பான கலந்துரையாடலிற்கான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டன.

புலனாய்வு உத்தியோகத்தர் பதவியை உருவாக்கும் பொருட்டு பல நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பதவிகளை அனுமதித்தல் மற்றும் தெரிவு செய்தல் தொடர்பில் ஆளணி நிறுவன பணிப்பாளர் நாயகம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து பரிந்துரைகளை பெறல், தெரிவு செய்தல் முறைமை தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கும் இத்திட்டம் அனுப்பிவைக்கப்பட்டது.

போக்குவரத்து உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் வர்த்தமானி வெளியீடு தொடர்பாக தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

பிரதிப்பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் மற்றும் நேர்முக தேர்விற்கான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டன.

இதற்கு மேலதிகமாக ஆட்சேர்ப்பு தொடர்பான பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பல்வேறு உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் 2017 இல் மேற்க்கொள்ளப்பட்டுள்ளன.